# மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தமிழ்

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

### (செய்யுள், உரைநடை)

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் –
**தொல்காப்பியம்**

2. 'மீண்டும் அந்த பழமை நலம் புதுக்குதற்கு'' – கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
2. பொதிகையில் தோன்றியது
3. வள்ளல்களைத் தந்தது – **1,3 இரண்டும் சரி**

3. ''மின்னோர் தனி ஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது
தன்னேரிலாத தமிழ்'' இவ்வடிகளில் பயின்றுவந்துள்ள தொடைநயம்
**அடி எதுகை, சீர் மோனை**

4. கருத்து 1 : இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
– **இரண்டு கருத்தும் சரி**

5. ''நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது'' – என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது – **மழைத்துளிகள்**

6. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் **மணல் அள்ளுதல்**

7 '**பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென' தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு
**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

8. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே, புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் இத்தொடர் உணர்த்துவது **கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

9. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை **திருமணமும் குடும்பமும்**

10. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது **– இவை அனைத்தும் (வக்கிரம், அவமானம் , வஞ்சனை )**

11. **''**உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்'' யார் ? யார் ? **இராமன், சுக்ரீவன்**

12 '' எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே'' – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

– **தந்தை வழிச் சமூக முறை**

13. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.

அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை



பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்

**இ) சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**

**ஏமப் புணையைச் சுடும்.**

14. கடலின் பெரியது **பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

15. வையகமும் வானகமும் ஆற்றல் அரிது எதற்கு ? **செய்யாமல் செய்த உதவி**

16. ''காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை'' இத்தொடரில் 'கலம்' உணர்த்தும் பொருள் **இசைக்கருவி**

17 சுரதா நடத்திய கவிதை இதழ் **காவியம்**

18. ''விண் வேறு; விண்வெளியில் இயங்குகின்ற

வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு'' இத்தொடர் தரும் முழுமையான பொருள்

**விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு**

19 சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க. **கடுக்காய்**

20 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல் **கணிதம்**

21. **கூற்று** : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்

**காரணம்** : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம். துணி சார்ந்ததாகவே இருந்தது

**கூற்று சரி, காரணம் சரி**

22. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' இத்தொடர் உணர்த்தும் பண்பு

**முரண் பண்பு**

23 'விளியறி ஞமலி' இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது ? **நாய்**

24. ஆர்ப்பரிக்கும் கடல்

அதன் அடித்தளம் மௌனம்;

மகா மௌனம் – அடிகள் புலப்படுத்துவது – **புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது**

25. ஏழாண்டு இயற்றிஓர் ஈராறு ஆண்டில் சூழ்கடல் மன்னற்குக் காட்டல்.... – தொடர்களில் வெளிப்படும் செய்திகள்


1 மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்

2 ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள் **இரண்டும் சரி**

26 வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக் காட்சி துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு இ) நடுக்காட்சித் துணிப்பு **ஈ) காட்சி மறைவு**

27 படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

**ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும்**
**உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.**

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற.

28 அல்லல் படுப்பதூஉம் இல் எவரோடு பழகினால் ? **தீயினத்தாரோடு**

29 'திண்ணியர்' என்பதன் பொருள் **மன உறுதி உடையவர்**

30 ஆராய்ந்து சொல்கிறவர் **தூதுவர்**

31. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர் **வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்**

32. எளியது, அரியது என்பன **சொல்வது – சொல்லியபடி செய்வது**

33. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

**சோழன் நலங்கிள்ளியை, கோவூர் கிழார்**

34. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

**கடந்தகாலத் துயரங்களை**

35 முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1 : கதை வடிவிலான வடிவமுடையது

கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது **கூற்று 1, 2 தவறு**

36 உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் இத்தொடரில் பெயரெச்சம் **வளர்ந்த**

**37.** யானை புக்க புலம்போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

– **தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது**

**38.** பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

**அ) தனித்தமிழ்த் தந்தை – மு. வரதராசனார்**

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி

இ) தமிழ்த் தென்றல் திரு வி. க

ஈ) மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்

39 ச த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய நூல் **கிறித்தவமும் தமிழும்**

40 'நான் வெற்று வெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தை தேடியபடி' என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது **தமது அடையாளத்தை**

41 சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

**திண்டிவனம்**

42 கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள் **நல்லியங்கோடனும் குமணனும்**

## இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம் (ஒரு மதிப்பெண்)

1. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

**இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.**

ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.

2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

**அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

3. தமிழில் திணைப் பாகுபாடு ……………………அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

– **பொருட்குறிப்பு**

4. ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்பார் அவரல பிறவே'' – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

**– தொல்காப்பியம்**

5. யார் ? எது ? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே **உயர்திணை, அஃறிணை**

6. அடைமழை பெய்த அடுத்த நாள் படை படையாய் வந்ததாம் பரங்கி நாட்டு விமானம்; எதிரி சுடாமலேயே இறகொடிந்து இறந்ததாம் அது என்ன ? **ஈசல்**

7 தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர் பச்சையாய் இருக்கிறது; பாக்கு வெற்றிலை போடாமல் வாய் சிவப்பாய் இருக்கிறது அது என்ன ? **கிளி**

8. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களில் பொருந்துவதைத் தேர்க

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளிவிட்டு எழுதுதல்

**இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

ஈ) வல்லின மெய்களை தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

9 படிமம் என்பதன் பொருள் **காட்சி**

10 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் பயின்று வந்துள்ளது **–வினைப் படிமம்**

11. **கூற்று** : உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

**காரணம்** : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை. **கூற்று சரி, காரணம் தவறு**

12 மெய்ப் படிமத்துக்கு உரிய பாடலைத் தேர்வு செய்க. **பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்......**

13. 'ஐம்பெரும் காப்பியம்' என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

**மயிலைநாதர்**

14 **கூற்று 1** : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

**கூற்று 2** : ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று நீலகேசி **கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

15. தவறான இணையைத் தேர்க.

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| **அ) விருத்தப்பா** | – | **நாலடியார்** |
| ஆ) ஆசிரியப்பா | – | அகநானூறு |
| இ) கலிவெண்பா | | தூது |
| ஈ) குறள் வெண்பா | | திருக்குறள் |

16. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

**வயதில் சிறியவள்; ஆனாலும் தலைவி!**

17 தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒற்றைத் தேர்க

அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்

ஆ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்

**இ) விளங்காத கருத்துக்களைப் பழமொழியின் மூலம் விளக்குவது**

18. 'சாப விமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

**புதுமைப்பித்தன்**

19 **கூற்று** **:** 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது

**காரணம்** **:** பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள் **கூற்றும் சரி, காரணமும் சரி**

20. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களில் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள் **உள்ளுறை உவமம்**

21. 'திட்டம்' என்னும் தலைப்பில், 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக ?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது ?

**அமுதசுரபி**

22 மறைத்துச் சொல்லவும் மிகுத்துத் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது ? **குறியீடு**

## செய்யுள் (2 மதிப்பெண்)

**1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?**

- சிவந்த வானம் போல், உழைப்பால் சிவந்த கைகளை உடைய தொழிலாளர், தோல் மீது முத்து முத்தாக வைத்திருக்கும் வியர்வைத்துளிகளைப் பற்றி வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் வேண்டுகிறார்.

**2. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது' – விளக்கம் தருக.**

- மழைக்காலம் ஆயினும் திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால், நகரம் புதுப்பொலிவு பெற்றது போல் ஒளிர்கிறது.
- எனவே, இதனை நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது என்கிறார் கவிஞர்

**3. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது ?**

- இராமனைக் கண்டதால், என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது என உரைக்கின்றாள்.

**4. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார் ?**

- அவ்வப்போது வந்து செல்லும் விருந்தாளிகளாக, உருவகப்படுத்துகிறார்

**5. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற ராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும் ?**

**அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ) சிறு துரும்பும் பல் குத்த உதவும்**

- நிழலின் அருமை வெயிலில் தெரியும்

**6. பொருள் கூறுக. அ) வெகுளி, ஆ) புணை, இ) ஏமம், ஈ) திரு**

விடை : அ) கோபம் ஆ) தெப்பம் இ) பாதுகாப்பு ஈ) செல்வம்

**7. ஞாலத்தின் பெரியது எது ?**

- உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், உலகத்தைவிடப் பெரியது

**8. மறக்கக் கூடாதது, மறக்கக்கூடியது எவற்றை ?**

- **மறக்கக்கூடாதது** : ஒருவர் செய்த நன்மை
- **மறக்கக் கூடியது** : ஒருவர் செய்த தீமை

**9. சினத்தை ஏன் காக்க வேண்டும் ?**

- ஒருவன் தன்னைத் தானே காக்க வேண்டும் என்றால், தன் சினத்தைக் காக்க வேண்டும் .

**10. இடையீடு – எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது ?**

- கவிஞனின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம், எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் மனநிலை ஆகியவற்றைக் குறியீடாக குறிப்பிடுகிறது

**11. வசனம், கவிதை வேறுபாடு தருக.**

- **வசனம்:** எதுகை மோனை இல்லாமல், அடி அளவினைக் கணக்கிடாமல், சொற்களைக் கொண்டு அமைக்கப்படுகின்ற வடிவம்.
- **கவிதை :** எதுகை மோனையோடு, அடி அளவைக் கணக்கிட்டு, யாப்பிலக்கண விதிப்படி சொற்களைச் சேர்ப்பது.

**12. "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" – யார்க்கு ?**

- கலைத் தொழில் வல்ல புலவர்களுக்கு, எத்திசை சென்றாலும் அத்திசையில் உணவு கிடைக்கும்

**13. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக.**

- **கலி விழா** – எழுச்சி தரும் விழா
- **ஒலி விழா** ஆரவாரம் நிறைந்த விழா

**14. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை ?**

- நகை,
- அழுகை,
- இளிவரல்,
- மருட்கை,
- அச்சம்,
- பெருமிதம்,
- வெகுளி,
- உவகை

**15. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.**

- **ஒருமுக எழினி** : மேடையின், ஒரு புறத்தில் இருந்து மறுபுறத்திற்கு செல்லுமாறு அமைக்கப்படும் திரை.
- **பொருமுக எழினி** : மேடையின், இரு புறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படும் திரை.

**16. 'மூச்சு நின்றுவிட்டால் பேச்சும் அடங்கும்' – கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.**

- எரிவதைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கிவிடும்

**17. 'நஞ்சுண்பவர்' என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார் ?**

- கள்ளுண்டு மகிழ்பவரை, நஞ்சுண்பவர் என்று வள்ளுவர் இடித்துரைக்கிறார்.

**18. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத் தகாதன யாவை ?**

- அரசரோடு நட்புப் பாராட்டினாலும், தீக்காய்வார் போல பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

**19. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது ?**

- அறிவு, பகைவரால் அழிக்க முடியாத அரணாகும்.

**20. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை ?**

- வரி திரட்டும் முறையறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால், நாடு பெரும் செல்வத்தைப் பெற்று செழிப்படையும் என்கிறார், பிசிராந்தையார்

**21. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

- அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யும் வகையில், அரசனுக்கு அறிவுரை கூறுவது.

**22. இறை மகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர் ?**

- மக்கள்,''பகைவர்களின் இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்க வில்லையே!''
- ''வானம் இடிந்து விழவில்லையே!''
- ''கடல்நீர் வற்றிப் போகவில்லையே !''
- மேலும், ''இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏன் ?'' என்று இறை மகனாரின் இன்னலைக் கண்டு புலம்பினர்

## உரைநடை (2 மதிப்பெண்)

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்றது, தொல்காப்பியம்.
- எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

**2. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக.**

- **புக்கில்** : தற்காலிகத் தங்குமிடம்
- **தன்மனை** : திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனித்து வாழுமிடம்.

**3. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை ?**

- தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள்
- கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள் 'தலைகீழ்ப்பாடம்' சொல்வதை அம்முறைகளில் காணலாம்.
- சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி , கொன்றைவேந்தன் போன்றவை.

**4. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**

- காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக்கொண்டு **1869**இல் இந்நூலகம் உருவாக்கப்பட்டது.
- அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

**5. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

- 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூல், கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும்.
- இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**6. "விரிபெரு தமிழர் மேன்மை ஓங்கிடச் செய்வ தொன்றே உயிர்ப்பணி யாகக் கொண்டோன்" – யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார் ?**

- பாவேந்தர் பாரதிதாசன் மயிலை சீனிவேங்கடசாமியைப் பற்றி கூறுகிறார்.
- தமிழர் மேன்மையை உயர்த்துவதையே தன் பணியாகக் கொண்டவர் வேங்கடசாமி அதனால், இவ்வாறு பாரதிதாசன் கூறினார்.

## இலக்கணம், மொழிப்பயிற்சி (2 மதிப்பெண்)

1. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

- **முடிந்தால் தரலாம்** – உன்னால் கொடுக்க முடிந்தால் பணம் தரலாம்.
- **முடித்தால் தரலாம்** வேலை முடித்தால், பணம் தரலாம்.

2. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?**
   - குறில், நெடில் வேறுபாடு அறிந்து எழுத வேண்டும்
   - எழுத்துகளின் ஒலிப்பு முறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை , கடை ) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக் கொள்வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.
   - சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிற போது பிழைகளைத் தவிர்க்க முடியும்.

3. **“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
   **கடாஅ யானைக் கலிமான் பேக” –** இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயம் மிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.
   - படாஅம், கெடாஅ, கடாஅ    செய்யுளிசை அளபெடைகள்

4. **விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**
   - விடியற்காலை தோன்றும் சூரியன் வனப்பை மறக்க முடியாது.

5. **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை ?**
   - திணை,
   - எண்,
   - பால்,
   - இடம்

6. **உயர்திணைப் பன்மை பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**
   - பன்மைப் பொருள் உணர்த்துவதற்கு ‘கள்’ என்னும் விகுதி தற்போது பயன்படுகிறது.

   **சான்று :**

   பள்ளிக்கு **மாணவர்கள்** தாமதமாக வந்தார்கள்.

   **ஆசிரியர்கள்** அறிவுரை கூறினார்கள்.

7. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் இரு தொடர்கள் ஆக்குக.
   - மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான். அதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

**8. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

- **அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்**

  இத்தொடரில் அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது.

- **அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றா ள்**

  இத்தொடரில் அந்தப் பெண்ணின் அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்வேறுபடுவதை அறியலாம்

9 **திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது ? அதற்கான இலக்கண விதி யாது ?**

- திருவளர் செல்வன் என்பதே சரியான தொடராகும்.
- வினைத்தொகையில், வல்லினம் மிகாது

**10. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை ?**

- இயற்சீர்வெண்டளை
- வெண்சீர் வெண்டளை

**11. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன ?**

- **இரு விகற்பம் :** வெண்பாவில், ஒவ்வொரு அடிகளும் வேறுவேறான எதுகை பெற்று வருவது
- **ஒருவிகற்பம் :** வெண்பாவில், நான்கடிகளும் ஒரே எதுகை பெற்று வருவது .

**12. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தி இருக்கிறது" – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது ?**

- வினைப்படிமம்

**13. காப்பியம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

காப்பியம் இரு வகைப்படும் அவை,

- பெருங்காப்பியம்,
- சிறுகாப்பியம்

**14. பாவிகம் – விளக்குக.**

- காப்பியத்தின் பண்பாகப் 'பாவிகம்' என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.
- காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே, பாவிகம் என்பர்.

**15. தொன்மம் – விளக்கம் தருக.**

- தொன்மம் என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள்உள்ளது.
- தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் 'தொன்மை' என்பதுவும் ஒன்றாகும் .
- கவிதையில் அது பழங்கதையைத் (புராணத்தை) துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவதையே குறிக்கிறது

**16. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

- சுட்டிய பொருளுக்கும், குறியீட்டு பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்
- இத்தொடர்பின் வாயிலாய் குறியீட்டு பொருளை நுண்ணிய முறையில் வெளிப்படுத்த வேண்டும்.

## மொழிப்பயிற்சி, துணைப்பாடம் (இரண்டு மதிப்பெண்)

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

| வ.எண் | உவமைத்தொடர் | சொற்றொடர் |
|---|---|---|
| 1. | தாமரை இலை நீர் போல | துறவியர், தாமரை இலை நீர் போல எதன்மேலும் ஆசையின்றி பற்றற்று இருப்பர். |
| 2. | கிணற்றுத் தவளை போல | மல்லிகா படித்திருந்தாலும், கிணற்றுத் தவளை போல அறியாமையுடன் இருந்தாள். |
| 3. | எலியும் பூனையும் போல | நானும் என் தம்பியும், எப்போதும் எலியும் பூனையும் போல சண்டையிடுவோம். |
| 4. | அச்சாணி இல்லாத தேர் போல | கணவன்மார்களின் குடிப்பழக்கத்தால், பல குடும்பங்கள், அச்சாணி இல்லாத தேர் போல அல்லல்படுகின்றன |
| 5 | உள்ளங்கை நெல்லிக்கனி போல | தமிழாசிரியர் சொல்லிக்கொடுத்த பாடம், உள்ளங்கை நெல்லிக்கனி போல புரிந்தது |

| வ.எண் | மயங்கொலி சொற்கள் | தொடர் |
|---|---|---|
| 1. | தலை, தளை, தழை | **தழை**களைக் கயிற்றால் **தளை**யிட்டு, **தலை**யில் சுமந்து சென்றான். |
| 2 | கலை, களை, கழை | **கலை**நிகழ்ச்சி காணவந்த கூட்டத்தைக் **களை**ந்தவாறே வேலையாட்கள் **கழை** சுமந்து சென்றனர் |
| 3. | அலை, அளை, அழை | **அளை**யிலிருந்த பாம்பு என்னைத் தீண்டியதால், என் நண்பன் **அலை**ந்துதிரிந்து மருத்துவரை **அழை**த்து வந்தான் |
| 4 | விலை, விளை, விழை | பாபு, **விளை**ந்து கிடக்கும் நெற்பயிரை **விலை** கொடுத்து வாங்க **விழை**ந்தான் |

**தொடர்களாக ஆக்குக.**

| வ.எண் | வினா | விடை |
|---|---|---|
| 1 | குமரன் வீடு பார்த்தேன் | குமர**னை வீட்டில்** பார்த்தேன் |
| 2. | மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும் ? | மாற**னின்** பேச்சுத்திற**னை** யார் வெல்ல முடியும் ? |
| 3 | போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன | போட்டி**யில்** வெற்றி பெற்ற**தால்** கலைச்செல்வி**க்குப்** பாராட்டுகள் குவிந்தன. |
| 4 | அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும். | அனைவரை**யும்** அன்பு**டன்** அழைத்தவ**னுக்கு,** துன்பம் தர யா**ருக்கு** மனம் வரும் |
| 5. | சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம். | சான்றோ**ருக்கு** மதிப்பு கொடு**த்தால்,** வாழ்**வில்** உயரலாம். |

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

| வ.எ | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத்தலைமுறை மீது தான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள். | என்னுடைய நம்பிக்கை முழுவதுமே **புதியதலைமுறை** மீது தான்; அவர்கள் **எல்லாப்** பிரச்சனைகளையும் ஒரு **சிங்கத்தைப்** போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள். |
| 2. | எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய் நிறைய தன்னம்பிக்கை கொள் | எத்தனை முறை நீ மற்றவர்கள் **முன்னேறிச் செல்வதனைக்** கண்டு ஒன்றும் செய்வதறியாது **நம்பிக்கையின்றித்** துன்புறுவாய் நிறைய தன்னம்பிக்கை கொள் |
| 3. | நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும். | நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் **தரத்தைப்** பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது **கூர்ந்த கவனம் அறிவைப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும் |
| 4. | மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ளவேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும். | மாணவர்கள் **பெற்றோர்களைத் தம்** நண்பர்களாக பாவித்து நட்பு கொள்ளவேண்டும். தமது இன்ப **துன்பங்களைப்** பெற்றோர்களுடன் **பகிர்ந்து கொள்ள** வேண்டும். |
| 5. | ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும் | **ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல்** என்னும் குணம், **உண்மையானவற்றைத் தெரிந்துகொண்டு** அறியாமையினை **அகற்றிப்** பல **நல்லனவற்றைக் கற்றுக்** கொடுக்கும் |

| வ.எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது. | நம் **மாநிலம்** இந்த ஆண்டு **வறட்சியால்** பாதிக்கப்பட்டது. |
| 2. | எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது | எங்கள் ஊரில் நூலகக் **கட்டடம்** கட்ட **அரசு** நிதி ஒதுக்கியது. |
| 3. | ரங்கன் வெங்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார். | **அரங்கன் வெண்கலப்** பாத்திரக் கடை வைத்திருக்கிறார். |
| 4. | மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன | **வானம்** பார்த்த பூமியில் **பயறு** வகைகள் பயிரிடப்படுகின்றன |
| 5. | ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது. | ஐப்பசி அடைமழையில் **ஊருணி** நிறைந்தது. |
| 6. | இன்னிக்குச் சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும் | **இன்றைக்குச் சாயுங்காலம் கபடிப்போட்டி** நடைபெறும் |

| வ.எ | வினா | விடை |
|---|---|---|
| 1. | பலகை | **பலகையால்** ஆன மேசையில் உணவு உண்டனர்<br>**பல கைகள்** இணைந்ததால் த ான் வெற்றி கிடைத்தது. |
| 2 | தாமரை | குளத்தில் **தாமரை** மலர்ந்தருந்தது<br>குளத்தல் **மான் தாவிக்**குதித்தது. (தா மரை) |
| 3. | கோவில் | மதுரையில் முருகன் **கோவில்** உள்ளது.<br>மதுரையில் **மன்னன் வாழ்ந்த அரண்மனை** உள்ளது.(கோ இல்) |
| 4 | வெங்காயம் | சமையலில் **வெங்காயம்** பயன்படும்<br>விபத்தில் சிக்கியவனுக்கு **வெம்மையான காயம்** ஏற்பட்டன<br>( வெம் காயம்) |
| 5. | தலைமை | தலைமையாசிரியர் விழாவிற்குத் **தலைமை** தாங்கினார்.<br>என் தந்தை நரைய மறைக்க **தலைக்கு மை** பூசுவார். |

**குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடி.**

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள், கவிமணி)

1. ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் – **சூடாமணி**
2. தமிழ்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் – **தமிழ்ஒளி**
3. சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம் – **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்துத் தமிழ் மாதம் – **கோதை**
5. தமிழறிஞர்; முதலிரு எழுத்துக்களால் மறைக்கலாம் – **மறைமலை அடிகள்**

**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

| வ.எண் | பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. | இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ. | இப்பொழுது எனக்கு புரிந்துவிட்டது. நீயும் புரிந்து கொள். |
| 2. | நிலத்தக் கெளறணும்டா அப்பதான் வகுறு நெறையும். | நிலத்தைக் கிளற வேண்டுமடா ! அப்பொழுதுதான் வயிறு நிரம்பும். |
| 3. | அன்னைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான. | அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதானே ? |
| 4. | வீட்டாண்ட வெளையாண்ட கொயந்தைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு | வீட்டருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே இழுத்துக்கொண்டு போனார் ? |
| 5. | புள்ளைக்கு ஒடம்பு சரியில்ல மூணு நாளா சிரமப்படுது | பிள்ளைக்கு உடம்பு சரியில்லை மூன்று நாளாக சிரமப்படுகிறது |
| 6. | ரவைக்குச் சித்தப்பனக் காவலுக்குப் போவச் சொல். | இரவுக்குச் சிறியதந்தையைக் காவலுக்குப் போகுமாறு சொல். |

**அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

| **வ.எண்** | **வினா** | **விடை** |
|---|---|---|
| 1. | கபிலன் திறமையானவர் என்று …(குமரன்) தெரியும். | குமரனுக்குத் |
| 2. | நேற்று முதல் …(அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது | அணையின் |
| 3 | உங்களுக்கு …..(யார்) நன்மை என நினைக்கிறீர்கள். | யாரால் |
| 4 | முருகன் ……(வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. | வேகமாகச் |
| 5. | நம்முடைய …………………(தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும். | தேவையின் |

**பொருள் வேறுபாடு அறிந்து ஒரே தொடரில் அமைக்க.**

| **வ.எண்** | **வினா** | **விடை** |
|---|---|---|
| 1 | களம், கலம் | (இடம்,பாத்திரம்) **போர்களத்தில்** புண்பட்ட வீரர்களுக்கு **கலத்தில்** நீர் வழங்கப்பட்டது |
| 2. | புல், புள் | (சிறு தாவரம், பறவை) **புல்** தரையில் **புள்** இரை தேடியது. |
| 3. | உழை, உளை | (பாடுபடு,சேறு) **உளையில்** இறங்கி **உழைத்தான்** இராமன். |
| 4 | கான், காண் | (காடு, பார்) **கான்** சென்று சிங்கத்தைக் **காண்** |
| 5 | ஊண், ஊன் | (உணவு, மாமிசம்) வள்ளுவர், **ஊணை ஊனாக** உண்ணக் கூடாது என்பார் |
| 6. | தின்மை, திண்மை | (தீமை, உறுதி ) **திண்மையுடையார்** மெலியாருக்குத் **தின்மை** செய்தல் கூடாது. |

**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

| வ.எண் | மரபுச் சொல் | தொடர் |
|---|---|---|
| 1 | ஆற அமர | எதையும் ஆறஅமர சிந்தித்துச் செயல்படு |
| 2. | ஆணி அடித்தாற் போல | என் ஆசியரியர் கற்பித்தது எனக்கு ஆணி அடித்தாற் போல புரிந்தது. |
| 3. | அகலக்கால் | எந்த தொழிலிலும் அகலக்கால் வைக்காமல் சிறுக சிறுக முன்னேற எண்ண வேண்டும். |
| 4. | வழிவழியாக | என் குடும்பம் வழிவழியாக இந்த வீட்டில் வசித்து வருகிறது. |
| 5. | கண்துடைப்பு | தேர்தலில் வெற்றி பெற்றதும், தலைவர்கள் கண்துடைப்புக்கு சில வாக்குறுதிகளை மட்டும் நிறைவேற்றுகிறார்கள். |

**தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

| வ.எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன. | வாழைத்**தோட்டத்தில்** குயில்கள் **கூவிக்**கொண்டும் காகங்கள் **கரைந்து** |
| 2 | ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான். | சோறு **உண்டு,** பால் **பருகினான்.** |
| 3. | கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டிக் கூரை அமைத்தார். | சுவர் **எழுப்பிக்** , கூரை **வேய்ந்தார்.** |
| 4 | வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன். | சிங்கக் **குருளையும்** யானைக் **கன்றும்** |
| 5 | ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகளின் பொந்துகள் அமைந்திருந்தன | ஆட்டுப் **பட்டியைச்,** எலி **வளைகள்** |

**தேவையான இடங்களில் நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக.**

1. இளங்கோவடிகள் சாத்தனாரிடம் முன் செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

   **விடை :** இளங்கோவடிகள் சாத்தனாரிடம், "முன் செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக!" எனக் கேட்டார்.

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. அ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

   **விடை : குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?**

2. ஆ) நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

   **விடை : நடுவண் அரசு, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை எப்போது அமைத்தது?**

3. இ) சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

   **விடை : சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் எவ்வெவற்றிற்கு உதவுகின்றன?**

4. ஈ) 1856–இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

   **விடை : 1856–இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் எங்கு அமைக்கப்பட்டது?**

5. உ) "எதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்

   **விடை : "எதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்று கூறியவர் யார்?**

   **விடை : கிரியோர்சன், எதனை ஆவணப்படம் என்கிறார்?**

**தமிழாக்கம் தருக**

1. Learning is a treasure that will follow its owner everywhere
   **கற்றல் என்பது பெரிய செல்வம் ; அச்செல்வம், எப்போதும் கற்பவரை அது தொடர்ந்து செல்லும்.**
2. A new language is a new life.
   **புதுமொழி என்பது புதுவாழ்க்கையைப் போன்றது.**
3 If you want people to understand you speak their language
   **மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீ அவர்கள் மொழியில் பேசு.**
4. Knowledge of languages is the doorway to wisdom.
   **பன்மொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.**
5 The limits of my language are the limits of my world
   **மொழிக்குறைபாடு என்பது உலகை அறியத்தடையாகும்.**

## நான்கு மதிப்பெண் வினாக்கள்

## (செய்யுள்)

1. **"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்" – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**
   - பகல் முழுவதும் வெண்மையான ஒளி வீசும் சூரியன், அந்தி மாலையில் சிவந்த கதிர்களைப் பரப்பி மலைமேட்டின் மேல்சென்று மறைவதால் அக்காட்சி, வானம் முழுவதும் பரவி, சிவந்த நிறத்தில் பூத்திருக்கும் பூக்காடு போல காட்சி அளிப்பதாக நயம்படக் கூறுகிறார், சிற்பி
2. **வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர் ?**
   - மேகமானது, உலகம் குளிருமாறு பொழிந்த புதிய மழையால், தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
   - தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.
   - அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.
   - பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோதிலும், அவர்களது பற்கள் நடுங்கின.

**3. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.**

- காட்டிற்குச் செல்லும் இராமனுக்கு, கங்கையைக் கடக்க குகன் உதவுகிறான்
- குகனிடம் இராமன், இதுவரை நாங்கள் நால்வரே உடன் பிறந்தவர் என்றிருந்தோம். உறவு என்பது எங்கள் நால்வரோடு நின்றுவிடவில்லை இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம் என்றான் இராமன்
- சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணனிடம் கூறுகிறான். அவன் கூற்றை மதியாத இராவணன், வீடணனைக் கடிந்தான். இலங்கையை விட்டு வந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான்.
- மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுகரீவனுடன் அறுவர் ஆனோம் உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்த்து எழுவர் ஆனோம் என்று கூறி மகிழ்ந்தான் இராமன்

**4. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.**

- ‘‘எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள்’’ இவை என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக்கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான்
- தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான்.
- பூக்களையும் கொண்டுவந்து தூவினான்
- மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான்.
- தெளிந்த நீரையும் எடுத்து வந்தான்.
- இறுதிச்சடங்கு செய்யப்படக் கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்

**5. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

- ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற மன இயல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணை ஆகும்.
- ‘வாயிலோயே’ எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடலிலும் அதியமான் நெடுமான்அஞ்சி என்னும் வள்ளலின் புகழ், கொடை முதலான சிறப்புகள் கூறப்பட்டுள்ளதால் பாடாண்திணை ஆகும்.

**6. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார் ?**

- இராமலிங்க அடிகள் கந்தவேளிடம், ஒரு நெறிப்பட்ட மனதுடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்.
- உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாக வைத்துப் பேசும் வஞ்சக உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்
- இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக ! என்று கேட்கிறார்.

**7. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார் ?**

- பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய பெரிய ஊர் திருமயிலை
- அங்கு, எழுச்சிமிக்க விழாக்கள் மூலம் மயிலைக் கபாலீச்சரம் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திரத் திருவிழாவானது நடைபெறும்

**8. ‘நெல்லின் நேரே வெண்கல் உப்பு’ – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

- பண்டைய நெய்தல் நில மக்கள் தங்கள் வாழிடத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி தொழில் செய்தனர். பரதவர், பெரிய கடல் பரப்பில் மீன் வேட்டையாடுவர். நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர்.
- அந்த வெண்ணிறக் கல்உப்பை, உப்புவணிகர் தங்களது வண்டியில் ஏற்றிச் சென்று, தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர் அப்போது ‘உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ’ என்று உமணர் ஒருவரின் மகள் கூவி விற்றாள்
- இதன்வழி, நெல்லுக்கு பதில் உப்பினை வழங்கி, பண்டமாற்று வணிகம் நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது

**9. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- இயல்புகளிலிருந்து மாறுபடாத நிலத்தை ஆடல் அரங்கத்திற்காக தேர்ந்தெடுத்தனர்
- முறைப்படி நீளம், அகலம், உயரம் உடையதாய் அரங்கம் அமைத்தனர். அரங்கின் உள்ளே செல்லவும், வெளியே வரவும் ஏற்ற அளவுகளுடன் இரு வாயில்கள் அமைத்துள்ளனர்
- தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி அழகான நிலை விளக்குகளை அமைத்திருந்தனர்.
- ஒருமுகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல் திரை போன்ற திரைகளைப் பயன்படுத்தியிருந்தனர்

**10. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார் ?**

- போரில் ஏற்பட்ட பேரழிவிற்கு பின் நினைவில் மட்டுமே இருக்கும் மரங்களின் பொட்டல் வெளியில் பிறந்த குழந்தையாய் மொட்டு விரித்து சிரிக்கிறது, ஓர் அதிசயமலர்
- அம்மலரானது, ஆட்களற்றபோது உலவிய யானைகளின் எச்சத்திலிருந்து முளைத்த செடியிலிருந்து மலர்ந்திருக்கலாம். யாருடைய காலணியின் பின்புறமோ விதையாய் ஒட்டிக்கிடந்து, இம்மண்ணில் உயிர் பெற்றிருக்கலாம் என்று தமிழ்நதி கூறுகிறார்.

**11. யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

- **உவமை :** யானை புகுந்த நிலம் போல
- **பொருள்:** குறைவான நிலத்தில் விளையும் நெற்கதிர்கள் யானைக்குப் பல நாட்களுக்கு உணவானாலும், தானாகப் புகுந்து அந்த யானையே உண்டால் மிகுதியான உணவு வீணாகும் அதுபோல, அறிவுடை வேந்தன் வரி திரட்டும் முறையறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு செல்வத்தைப் பெற்று சிறப்படையும் முறைதவறி செய்வானாகில் யானை புகுந்த நிலம்போல, தானும் உண்ணாது அவனைச் சுற்றியுள்ள நாட்டு மக்களும் துன்புறுவர்

**12. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.**

- பேகன் மயிலுக்குப் போர்வை அளித்தவன்
- பாரி – முல்லைக்குத் தேர் தந்தவன்
- காரி – குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இரவலர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் இனிய மொழிகளுடன் கொடுத்தவன்
- ஆய் ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும், நாகம் கொடுத்த ஆடையையும் இறைவனுக்குக் கொடுத்தவன்
- அதியமான் – கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை ஔவைக்கு அளித்தவன்
- நள்ளி – தன்னிடம் உள்ள செல்வத்தை இல்லை என்னாது நட்பு கொண்டவர் உள்ளம் மகிழ கொடுத்தவன்.
- ஓரி – வளம் நிறைந்த சிறிய மலை நாட்டைக் கூத்தருக்குப் பரிசாக வழங்கியவன்.

## இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**1. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்"**

**இடம் :**

'ஓங்கலிடை' எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

சூரியனும் தமிழும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள இருளைப் போக்கும் தன்மை வாய்ந்தன.

**விளக்கம்**

சூரியன், தன் கதிர்களால் உலகில் உள்ள புற இருளைப் போக்கும். தமிழ், மக்களின் அக இருளைப் போக்கி அறியாமையை அகற்றும் சிறப்புடையது.

**2. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து"**

**இடம் :**

இக்கவிதை வரி என்.சத்தியமூர்த்தி மொழிபெயர்த்த 'தாகம் கொண்ட மீனொன்று' எனும் கவிதைத் தொகுப்பில் ஜலாலுத்தீன் ரூமியின் 'விருந்தினர் இல்லம்'என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

தன் வாழ்வில் வரும் இன்ப துன்பங்களை, முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**விளக்கம் :**

வக்கிரம், அவமானம், வஞ்சனை முதலானவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும் என்கிறார்.

3. **"எங்கிருந்தோ வருகிறது**
**வண்ணத்துப்பூச்சி ஒன்று**
**பறவைகளும் வரக்கூடும் நாளை"**

**இடம் :**

தமிழ்நதி இயற்றிய 'அதன் பிறகு மிஞ்சும்' என்னும் கவிதைத் தொகுப்பில் 'அதிசய மலர்' என்னும் தலைப்பில் இக்கவிதை அமைந்துள்ளது.

**பொருள்:**

பூவின் அடையாளம் கண்டு எங்கிருந்தோ வண்ணத்துப்பூச்சி வருகிறது; பறவைகளும் நாளை வரும்.

**விளக்கம் :**

போர் முடிந்தபின், குண்டுகளால் அழிக்கப்பட்ட தாய்மண்ணில் பூ ஒன்று மலர்கிறது. வண்டுகள் பூவைத் தேடி வருகின்றன. பூ நம்பிக்கையைத் தருகிறது. நாளை அப்பூவைத் தேடி பறவைகளும் வரலாம். அந்த பூவின் புன்னகை, நாடு பற்றிய நம்பிக்கையைச் சிதறிய மனிதரிடையே பரப்புகிறது.

## உரைநடை (4 மதிப்பெண்)

1. **சங்கப்பாடல்களில் ஒலிக் கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.**

எந்த தொன்மையான மொழியும் சமக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன இதையே ஒலிப்பின்னல் என்கிறோம்.

**"கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"**

என்ற வரிகளில், வல்லின மெய்கள் மிகுந்து வருதலைக் காணலாம்.

**“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**

**கடாஅ யானைக் கலிமான் பேக”**

**“புணரின் புணராது பொருளே”**

போன்ற பாடல் வரிகளில் உயிரொலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியப் பண்பென அறியமுடிகிறது.

**2. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- பேரிடர் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்ளை அமைக்க வேண்டும்.
- நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்
- கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.

**3. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.**

- நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- புயல், வெள்ளம், நிலநடுக்கம், சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துக்கள் முதலான பேரிடர்கள் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
- இதற்காக மாநிலம், மாவட்டம், ஊராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து பேரிடர்க் காலங்களில் செயலாற்ற வழிவகை செய்துள்ளது.

**4. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

- சென்னை நகரின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு இந்திய சராசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றும்
- தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கும் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கும் பேருதவி புரியும் எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம்,

இந்தியாவின் முதல் பொதுநூலகமான கன்னிமாரா நூலகம் போன்றவை சென்னையின் அடையாளத்தைப் பேணுபவையாகும்.

- திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம் ஆகியவையும் குறிப்பிடத்தக்க அடையாளங்களாகும்

**5. வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

- வேளாண்மைகுள்ளும் மேலாண்மை கூறுகள் உண்டு.
- சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் பாதுகாத்தல், உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிர்வாகநெறியும் இணைந்தால் வேளாண்மேலாண்மை செழிக்கும்.

## அணிகள்

**1. நிரல் நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி விளக்கம் :**

ஒரு செய்யுளில், முன்னர் கூறியவற்றோடு தொடர்புடைய செய்திகளைப் பின்னர் கூறும்போது, முன்னர் கூறிய வரிசையில் நிறுத்தி நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவது நிரல்நிறை அணி ஆகும்.

**சான்று :**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

**பொருள் :**

இக்குறளில், வாழ்வு சிறக்க அன்பும் அறமும் இன்றியமையாதன. அவை, இல்வாழ்வின் பண்பும் பயனும் ஆகும் என்று நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவதால் நிரல்நிறை அணி ஆகும்.

**2. ஏகதேச உருவக அணி**

**அணி இலக்கணம் :**

கவிஞர் தான் கூறும் பொருளில் ஒன்றை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்

**சான்று**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்

**அணிப் பொருத்தம்**

கவிஞர் சினத்தை நெருப்பாக உருவகிக்காமல் இனத்தைத் தெப்பமாக உருவகம் செய்தமையால் ஏகதேச உருவக அணி ஆயிற்று.

**3. தொழில் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம்**

ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாய் அமையும் உவமை, தொழில் உவமை எனப்படும்.

**சான்று**

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

**விளக்கம்**

அரசரோடு நட்புப் பாராட்டினாலும், தீக்காய்வார் போல பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். தீக்காய்தல் என்னும் தொழில் முறைமை உவமையாகக் கூறப்பட்டுள்ளது எனவே தொழில் உவமை அணி அமைந்துள்ளது

**4. எடுத்துக்காட்டு உவமையணி**

**அணி விளக்கம்**

உவமானத்தை வேறாகவும், உருவமேயத்தை வேறாகவும் கூறி, இடையே ஒப்புமை காட்டும் உவமவுருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**சான்று**

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

**பொருள்**

உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; கள்ளுண்பவரும் நஞ்சை உண்பவரே ஆவர்.

| | |
|---|---|
| உவமை | உறங்கியவர், இறந்தவராகக் கருதப்படுவார் |
| உவமேயம் | நஞ்சையே கள்ளாய் உண்பவர் |
| உவம உருபு | ‘போல’ மறைந்து வந்துள்ளது. |

## பாநயம் பாராட்டல்

| வ எ | பாடல் | பா நயங்கள் |
|---|---|---|
| 1. | முச்சங்கம் கூட்டி<br>முதுபுலவர் தமைக் கூட்டி<br>அச்சங்கத் துள்ளே<br>அளப்பரிய பொருள் கூட்டி<br>சொற்சங்க மாகச்<br>சுவைமிகுந்த கவி கூட்டி<br>அற்புதங்க ளெல்லாம்<br>அமைத்த பெருமாட்டி !<br>– **கண்ணதாசன்.** | **எதுகை**<br>முச்சங்கம்/அச்சங்கம்<br>சொற்/ அற்புத<br><br>**மோனை**<br>முச்சங்கம் முதுபுலவர்<br>அச்சங்க – அளப்பரிய<br><br>**இயைபு** கூட்டி<br><br>**அணி** இயல்பு நவிற்சி அணி |
| 2. | வெட்டியடிக்குது மின்னல் – கடல்<br>வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;<br>கொட்டி யிடிக்குது மேகம் – கூ<br>கூவென்று விண்ணைக் குடையுது காற்று;<br>சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று<br>தாளங்கள் கொட்டி கணைக்குது வானம்;<br>எட்டுத்திசையும் இடிய மழை<br>எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !<br>– **பாரதியார்.** | **எதுகை** வெட்டி /கொட்டி<br>சட்டச்சட / எட்டு<br><br>**மோனை** வீரத் விண்ணை<br>கூவென்று குடையுது<br><br>**அணி** உயர்வு நவிற்சி அணி |
| 3. | பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி<br>பிற மொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க<br>ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்<br>உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ ?<br>கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று<br>கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்<br>தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட<br>தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்<br>– **நாமக்கல் கவிஞர்** | **எதுகை** பெற்ற /உற்ற/ கற்ற /<br>தெற்ற<br><br>**மோனை** பெற்ற பிற<br>ஊற்றெடுத்தே –உலகத்<br>கற்று –கம்பன்<br>தெற்றென –தெய்வ<br><br>**சுவை** பெருமிதச்சுவை<br><br>**அணி** இயல்பு நவிற்சி அணி |

| | | |
|---|---|---|
| 4. | பிறப்பினால் எவர்க்கும் உலகில்<br>பெருமை வாராதப்பா!<br>சிறப்பு வேண்டுமெனில் – நல்ல<br>செய்கை வேண்டுமப்பா!<br>நன்மை செய்பவரே உலகம்<br>நாடும் மேற்குலத்தார்!<br>தின்மை செய்பவரே – அண்டித்<br>தீண்ட ஒண்ணாதார்!<br>**–கவிமணி தேசிக விநாயகம்.** | **எதுகை** பிறப்பு / சிறப்பு<br>நன்மை/ தின்மை<br>**மோனை** பிறப்பு –பெருமை<br>சிறப்பு – செய்கை<br>நன்மை – நாடும்<br>தின்மை – தீண்ட<br>**சந்தம்** சிந்துப்பா<br>**அணி** இயல்பு நவிற்சி அணி |
| 5. | அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;<br>அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்.<br>பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ ?<br>பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்<br>சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்<br>சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி<br>இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்<br>எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ ?<br>**– பாரதிதாசன்.** | **எதுகை** அந்தி /பிந்தி /<br>சிந்தாமல் /<br>இந்தாவெ<br>**மோனை** அந்தி –அவ்வாறே<br>பிந்தி பெருஞ்<br>சிந்தாமல் – சேகரித்து<br>**இயைபு** கண்டேன்<br>**சுவை** வியப்பு |
| 6. | பூமிச்சருகாம் பாலையை – முத்துப்<br>பூத்த கடல்களாக்குவேன்<br>புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்<br>புதிய தென்றலாக்குவேன்<br>இரவில் விண்மீன் காசினை – செலுத்தி<br>இரவலரோடு பேசுவேன்!<br>இரவெரிக்கும் பரிதியை ஏழை<br>விறகெரிக்க வீசுவேன்<br>**– நா. காமராசன்.** | **எதுகை** இரவில்<br>இரவலரோடு<br>இரவில் /<br>இரவெரிக்கும்<br>**மோனை** பூமி – பூத்த<br>புயலை – புதிய<br>இரவில் இரவலரோடு<br>**இயைபு** கடலாக்கு**வேன்**<br>தென்றலாக்கு**வேன்**<br>பேசு**வேன்**<br>வீசு**வேன்**<br>**அணி** உயர்வு நவிற்சி அணி |

| | | |
|---|---|---|
| **7.** | வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்<br>மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்<br>கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்<br>கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்<br>தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்<br>செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்<br>கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்<br>குற்றாலத் திரிகூட மலையெ ங்கள் மலையே.<br>**–திரிகூடராசப்பக் கவிராயர்.** | **எதுகை**<br>வானரங்கள் / கானவர்<br>தேனருவி /கூனலிளம்<br><br>**மோனை**<br>கானவர் – கமனசித்தர்<br>கூனலிளம் – குற்றால<br><br>**இயைபு**<br>கொஞ்சும் – கெஞ்சும்<br>யழைப்பார் – விளைப்பார்<br>யொழுகும் – வழுகும்<br><br>**அணி** இயல்பு நவிற்சி அணி |

## மனப்பாடப்பகுதி

### 1. தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் ஆங்கவற்றுள்

மின்னோர் தனியாழி வெங்கதிரரொன்(று) ஏனையது

தன்னோர் இலாத தமிழ்!

**பா வகை: நேரிசைவெண்பா**

### 2. நெடுநல்வாடை

‘வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யாவானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
**பா வகை: நேரிசைவெண்பா** **– நக்கீரர்.**

## 3. கம்பராமாயணம்

'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது ? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது எனஉன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது எனஉன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**பா வகை: கலி விருத்தம்**

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனோம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய !
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

**பா வகை : அறுசீரக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

## 4. திருக்குறள்

1 அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

2 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

3. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது

4. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

5. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

6. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

7. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

8. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
   தன்னையே கொல்லும் சினம்.
9. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
   ஏமப் புணையைச் சுடும்.
10 நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
   உண்மை அறிவே மிகும்.

## 5. இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற

வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;

மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்

மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;

புண்வேறு; வீரர்களின் விழுப்புண்வேறு;

புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்

கண்வேறு; கல்விக்கண்வேறு; கற்றார்

கவிநடையும் உரைநடையும் வேறு வேறு. – சுரதா

**பா வகை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

## 6. புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,

வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்

காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;

மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத்து அற்றே

எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே

– ஔவையார்

**பா வகை: நேரிசைஆசிரியப்பா**

### 7. தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற

உத்தமர்தம் உறவுவேண்டும்

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்

உறவுகல வாமைவேண்டும்

பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை

பேசா திருக்கவேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்

பிடியா திருக்கவேண்டும்.

**– இராமலிங்க அடிகள்**

**பா வகை : பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

### 8. சிலப்பதிகாரம் – புகார் காண்டம்

### அரங்கேற்றுக்காதை

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே, முழவொடு

கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை

**– இளங்கோவடிகள்**

**பா வகை : ஆசிரியப்பா**

### 9. திருக்குறள்

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
   உள்அழிக்கல் ஆகா அரண்
2. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
   பொருள் காண்பது அறிவு.
3. எதிரதாக்காக்கும்அறிவினார்க்கு இல்லை
   அதிர வருவதோர் நோய்.

4. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்
5. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற
6. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம்செயல்.
7 உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.
8. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.
9. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
போல் பகைவர் தொடர்பு
10. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

## 10. புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;

மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;

நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,

வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

– பிசிராந்தையார்

**பா வகை: நேரிசைஆசிரியப்பா**

## 11. இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி

ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற

வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்

நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

– எச்.ஏ. கிருட்டிணனார்

**பாவகை: அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

## இலக்கணக்குறிப்பு

**பண்புத்தொகை**
அருந்திறல்
கருந்தடம்
கொடுங்கோல்
செம்பரிதி
செந்தமிழ்
செந்நிறம்
தொல்நெறி
நன்கலம்
நன்மொழி
நன்னாடு
நெடுவழி
நெடுவேல்
பெருங்கடல்
புதுப்பெயல்
வெங்கதிர்
வெங்குருதி
வெள்ளருவி

**வினைத்தொகை**
காய்நெல்
தாழ்கடல்
வயங்குமொழி
வளர்தலம்
விரிகடல்

**தொழிற்பெயர்**
நகை
அழுகை
இளிவரல்
மருட்கை
அச்சம்
பெருமிதம்
வெகுளி
உவகை
சொல்லுதல்
மலைதல்
மறத்தல்

**எண்ணும்மை**
அறிவும் புகழும்
அன்பும் அறமும்
ஆடலும் பாடலும்

**அடுக்குத்தொடர்**
ஊன்ற ஊன்ற
முத்துமுத்தாய்

**பெயரெச்சம்**
ஈந்த
கொடுத்த
சொற்ற
திருந்திய
புக்க
வாய்த்த

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
அடையா
அறியா
பொய்யா
மறவா

**வினையெச்சம்**
சிவந்து
வெந்து

**வினையாலணையும் பெயர்**
உயர்ந்தோர்
செற்றவர்
பாதகர்

**இசைநிறை அளபெடை**
உழாஅது
கவாஅன்
சிறாஅர்

**இன்னிசை அளபெடை**
படுப்பதூஉம்

**சொல்லிசை அளபெடை**
ஒரீஇ
வளைஇ
வெரீஇய

**உரிச்சொல் தொடர்**
தடக்கை
மாதவம்
மாமயிலை

## புணர்ச்சி விதி

| | | |
|---|---|---|
| **1. ஈறுபோதல்.**<br>செம்பரிதி = செம்மை+பரிதி<br>நன்மொழி = நன்மை+மொழி<br><br>**1. ஈறுபோதல்,**<br>**2. இனமிகல்.**<br>அருங்கானம் = அருமை+கானம்<br>பெருங்கடல் = பெருமை+கடல்<br>பெருந்தேர் = பெருமை+தேர்<br><br>**1. ஈறுபோதல்,**<br>**2. முன்நின்ற மெய்திரிதல்.**<br>செந்தமிழே = செம்மை+தமிழே<br>வெங்கதிர் = வெம்மை+கதிர்<br><br>**1. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**<br>வானமெல்லாம் = வானம்+எல்லாம்<br>உரனுடை = உரன்+உடை | **1. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்,**<br>**2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**<br>உள்ளொன்று = உள்+ஒன்று<br>செல்லிடத்து = செல்+இடத்து<br>முன்னுடை = முன்+உடை<br><br>**1. உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்,**<br>**2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**<br>ஆங்கவற்றுள் = ஆங்கு+அவற்றுள்<br><br>**1. பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்.**<br>பூம்பாவாய் =பூ+பாவாய் | **1. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்.**<br>எத்திசை = எ+திசை<br>தலைக்கோல் = தலை+கோல்<br><br>**1. இ ஈ ஐ வழி யவ்வும் தோன்றும்,**<br>**2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**<br>உன்னையல்லால் = உன்னை+அல்லால்<br>தனியாழி = தனி+ஆழி<br>ஒருமையுடன் = ஒருமை+உடன்<br>ஏழையென = ஏழை+என<br><br>**1. மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்.**<br>இனநிரை = இனம்+நிரை |

www.Padasalai.Org